செ.வெ.எண்:144 **பத்திரிக்கைச் செய்தி** நாள்.12-02-2010.

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் உத்தரவின்பேரில் இணை ஆணையாளரின் தலைமையில், சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளிலுள்ள 16 உணவுத்துறை மண்டலங்களில் செயல்படும் நியாயவிலைக் கடைகளை 11.02.2010 அன்று, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர்கள், துணை ஆணையாளர்(நகரம்)வடக்கு மற்றும் தெற்கு மற்றும் 16 மண்டலங்களைச் சேர்ந்த உதவி ஆணையாளர்களைக் கொண்ட குழுக்கள் 140 நியாயவிலைக் கடைகளை திடீர் தணிக்கை செய்தார்கள். தணிக்கையின்போது ஒருசில கடைகள் உரிய நேரத்தில் திறக்காமை, மின்னணு எடை இயந்திரங்கள் சரிவர இயங்காமை, மின்னணு பட்டியல் இயந்திரங்கள் இயங்காமை, எடைகுறைவு, இருப்புக்குறைவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் இருப்பின்மை கண்டுபிடிக்கப்பட்டது. இருப்பின்மை காணப்பட்ட கடைகளுக்கு உடனடியாக அத்தியாவசியப் பொருட்கள் சம்மந்தப்பட்ட கிடங்குகளிலிருந்து கொண்டுவர உத்தரவிடப்பட்டது.

தணிக்கையின்போது மிக அதிக அளவில் முறைகேடுகள் காணப்பட்ட கீழ்க்கண்ட நியாயவிலைக் கடைகளின் சம்மந்தப்பட்ட பணியாளர்களை பணியிடை நீக்கம் செய்ய ஆணையாளரால் சம்மந்தப்பட்ட கூட்டுறவுத்துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

| வ.எண் | மண்டலத்தின் பெயர் | கடை குறியீடு |
|---|---|---|
| 1 | தி.நகர் மண்டலம் | TUCS வடபழனி<br>TUCS கோடம்பாக்கம் |
| 2 | மயிலாப்பூர் மண்டலம் | அமுதம் தெற்கு மாட வீதி<br>அடையார் மகளிர் கூட்டுறவு பண்டக சாலை |
| 3 | ஆவடி மண்டலம் | சைதை கூட்டுறவு பண்டகசாலை, செங்குன்றம் |

இதுபோன்ற தவறுகள் மீண்டும் தென்பட்டால் சம்பந்தப்பட்ட கடை ஊழியர்களின் பேரிலும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மேலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தார்கள்.

மேலும் சென்னை மாநகரை பொறுத்தவரை நியாய விலைக் கடைகளில் சேவைக் குறைபாடு ஏதும் இருப்பின் பொதுமக்கள் கீழ்க்கண்ட அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம்.

துணை ஆணையாளர்(நகரம்) வடக்கு - 28551028

துணை ஆணையாளர்(நகரம்) தெற்கு - 28551026

இணைப் பதிவாளர், பொது விநியோகத் திட்டம் (வடக்கு) - 25353034

இணைப் பதிவாளர், பொது விநியோகத் திட்டம் (தெற்கு) - 23651721

ஆணையாளர் அலுவலகம், நுகர்வோர் சேவை மையம் - 28592828

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.